**A**

ಒಟ್ಟು ಮುದ್ರಿತ ಪುಟಗಳ ಸಂಖ್ಯೆ : 12 ]

Total No. of Printed Pages : 12 ]

ಒಟ್ಟು ಪ್ರಶ್ನೆಗಳ ಸಂಖ್ಯೆ : 45 ]

Total No. of Questions : 45 ]

**CCE RR**

**Question Paper Serial No. 600**

**ಸಂಕೇತ ಸಂಖ್ಯೆ : 10-T**

**Code No. : 10-T**

**ವಿಷಯ : ಪ್ರಥಮ ಭಾಷೆ— ತಮಿಳು**

# Subject : First Language — TAMIL

**( ಪುನರಾವರ್ತಿತ ಶಾಲಾ ಅಭ್ಯರ್ಥಿ / Regular Repeater )**

ದಿನಾಂಕ : 28. 06. 2022 ] [ Date : 28. 06. 2022

ಸಮಯ : ಬೆಳಿಗ್ಗೆ 10-30 ರಿಂದ ಮಧ್ಯಾಹ್ನ 1-45 ರವರೆಗೆ ] [ Time : 10-30 A.M. to 1-45 P.M.

ಗರಿಷ್ಠ ಅಂಕಗಳು : 100 ] [ Max. Marks : 100

**பொதுவான குறிப்புகள் :**

1. இந்த வினாத்தாள் புறவய மற்றும் அகவய வகை (Objective and Subjective) வினாக்கள் 45-ஐ கொண்டுள்ளது.
2. இந்த வினாத்தாள் பின்புறமாக மூடி வைக்கப்பட்டுள்ளது (Sealed by reverse jacket). நீங்கள் தேர்வு ஆரம்பிக்கும்பொழுது அதனை வெட்டி எடுத்து பிரிக்க வேண்டும். வினாக்களை உள்ளடக்கிய அனைத்துப் பக்கங்களும் சரியாகவும் பிரிக்கப்படாமலும் உள்ளதா என சரிபார்க்கவும்.
3. மாணாக்கர்கள் தங்களது விடைகளை முடிந்தவரை தங்களது சொந்த நடையில் எழுத வேண்டும்.
4. வலதுகைப் பக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ள எண்கள் அதிகபட்ச மதிப்பெண்ணைக் குறிக்கிறது.
5. மாணவர்கள் வினாத்தாளைப் படிப்பதற்கென கூடுதலாக 15 நிமிடங்கள் தரப்பட்டுள்ளன.

இங்கிருந்து பிரிக்கவும்

**TEAR HERE TO OPEN THE QUESTION PAPER**

இங்கு ஒட்டியுள்ள பகுதியைப் பிரித்துத் திறக்கவும்

**Tear here**

**I. கொடுக்கப்பட்டுள்ள நான்கு விடைகளுள் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் எழுதுக :** **6 × 1 = 6**

1. முல்லை நிலம் சிறந்து காணப்படும் காலம்

   (A) துளிர் இலைக் காலம்

   (B) மழைக்காலம்

   (C) குடத்தியர் வணங்கும் காலம்

   (D) கோவர் கூட்டம் மிகுந்த காலம்

2. கரை, திரை, குரை எனத் தொடங்கும் அடியில் இரண்டாம் எழுத்து ஒன்றி வருவது

   (A) எதுகை

   (B) மோனை

   (C) முரண்

   (D) அந்தாதி

3. பைந்தமிழ்

(A) பசும் + தமிழ்

(B) பசுந் + தமிழ்

(C) பசுமை + தமிழ்

(D) பைந் + தமிழ்

4. வெற்றிலை நட்டான்

(A) காலவாகு பெயர்

(B) இடவாகு பெயர்

(C) பொருளாகு பெயர்

(D) சினையாகு பெயர்

5. குற்றமற்ற வெற்றியைக் கொண்டாடுதல்

(A) வஞ்சி

(B) வாகை

(C) காஞ்சி

(D) வெட்சி

6. இலங்கு என்பது

(A) உயிரளபெடை

(B) ஒற்றளபெடை

(C) குற்றியலுகரம்

(D) குற்றியலிகரம்

**II. முன்னுள்ளதைப் போன்று பின்னுள்ளதை ஏற்ற சொல்லால் நிரப்புக :**

**4 × 1 = 4**

7. செய்யுளைச் சொல்லால் அழகுபட புனைவது சொல்லணி;

செய்யுளைப் பொருளால் அழகுபட புனைவது : ........................... .

8. முல்லைக்குத் தேர் ஈந்தான் பாரி;

ஔவைக்கு கனி கொடுத்தான் : ........................... .

9. சுமந்த மக்கள் - பெயரெச்சம்;

சுமந்து சோர்ந்தான் : ........................... .

10. தீயினால் சுட்ட புண் ஆறும்;

நாவினால் சுட்டது : ........................... .

**III. ஒரு தொடரில் விடை தருக : 7 × 1 = 7**

11. மாணிக்கவாசகர் சிவனை எவ்வுருவில் தோன்றுவதாய்க் கூறுகிறார்?

12. யாரைக் கண்டதும் நிலம் என்னும் நல்லாள் நகுவாள்?

13. நற்பண்புகள் நிறைந்தவனாக்குதல் யாருடைய கடமை?

14. பாரதியார் கூறும் விந்தை மனிதர் யார்?

15. மனித யந்திரங்கள் எவற்றால் ஆனவை?

16. மிருகங்களுக்கு மருத்துவமனை நிறுவிய மன்னர் யார்?

17. பாமர மக்களின் விருப்பமான விளையாட்டு எது?

**IV. மூன்று அல்லது நான்கு தொடர்களில் விடை தருக : 10 × 2 = 20**

18. புகழையும் இன்பத்தையும் தரவல்லது எது என்கிறார் வள்ளுவர்?

19. பிரமன் இராவணனுக்குக் கொடுத்த சாபம் யாது?

20. காளைகளுக்கு சொல்வது போல் மக்களுக்குப் பட்டுக் கோட்டையார் கூறுவது என்ன ?

21. திரு.வி.க வை ஒரு வானம்பாடி என எவ்வாறு கூறலாம்?

22. இளைஞன் தன்னை எதைப் போன்று வழி நடத்திக் கொள்ள வேண்டும் என்று வைரமுத்து கூறுகிறார்?

23. பம்பன் இயற்றிய நூல்கள் யாவை?

24. தீப்பெட்டி ஆபிஸில் இருந்து திரும்பிய பஸ்கள் எவ்வாறு குழந்தைகளை வெளியே தள்ளியது?

25. இறந்தகாலம் பற்றி வைரமுத்து கூறுவது யாது?

26. மோனை நயத்துடன் கூடிய விடுகதை ஒன்றை எழுதுக.

27. அடி என்றால் என்ன? அதன் வகைகளைக் கூறுக.

**V. ஐந்து அல்லது ஆறு தொடர்களில் விடை தருக : $4 \times 3 = 12$**

28. அறன் வலியுறுத்தல் குறித்து வள்ளுவர் கூறுவனவற்றை விளக்குக.

29. தாய், தந்தை, கொல்லன், அரசன், மகன் செய்ய வேண்டிய கடமைகளைப் பொன்முடியார் வழிநின்று விளக்குக.

30. நிலக்கரி தரும் நன்மைகளை எழுதுக.

31. கிராமத்துப் பெண்குழந்தைத் தொழிலாளர் பற்றி கி.ராஜநாராயணன் என்ன கூறுகிறார்?

**VI. குறிப்பு வரைக : 2 × 3 = 6**

32. திருக்குறள்

33. கவிப்பேரரசு வைரமுத்து

**VII. கீழ் வரும் அணியைச் சான்றுடன் விளக்குக : 1 × 3 = 3**

34. வேற்றுமை அணி

**VIII. இடம் சுட்டிப் பொருள் விளக்குக : 3 × 3 = 9**

35. ''மரம் வளர்த்தால் நரகம் இல்லை''.

36. ''நனியுண்டு நனியுண்டு காதல் - தமிழ்

நாட்டினர் யாவர்க்குமே தமிழ் மீதில்''

37. ''அப்படிப்படும் அடியினால் முப்பது வயதிலேயே

உனக்கு முதுமை வந்துவிடும்''

**IX. கீழ் வரும் பழமொழியை விளக்குக : 1 × 3 = 3**

38. ''ஞாயிற்றைக் கை மறைப்பார் இல்''.

*அல்லது*

''அகத்தின் அழகு முகத்தில் தெரியும்''.

**X. அடிபிறழாமல் எழுதுக : 1 × 4 = 4**

39. ''சோதியாய்த் தோன்றும்'' எனவரும் திருவாசகப் பாடல்.

*அல்லது*

''பட்டங்கள் ஆள்வதும்'' என வரும் பெண் கும்மிப் பாடல்.

**XI. எட்டு அல்லது பத்து தொடர்களில் விடை தருக : 2 × 4 = 8**

40. பிறர்க்கென வாழ்வோரின் அரும் பெரும் பண்புகளை இளம்பெருவழுதி எவ்வாறு பட்டியலிடுகிறார்?

41. இலட்சியம் பற்றி வைரமுத்து கூறும் கருத்துக்களைச் சுருக்கி எழுதுக.

*அல்லது*

இலங்கையில் சீதை இருந்த நிலை பற்றி அனுமன் கூறியவற்றை எழுதுக.

**XII. கீழ்வருவனவற்றை விளக்கி எழுதுக : 1 × 4 = 4**

42. ''இந்திய நாடிது என்னுடைய நாடே
என்று தினந்தினம் நீயதைப்பாடு
சொந்தமில் லாதவர் வந்தவர் ஆள
தூங்கிக் கிடந்தது போனது மாள''.

*அல்லது*

''பெண் சுமந்தோன் மண்சுமந்தான் பிட்டுக்காய் அம்மானை
பெண் சுமந்தோன் மண்சுமந்தான் பிட்டுக்காய் ஆமாகில்
மண் சுமந்து மாற்றடியேன் வாய்ந்தனன் காண் அம்மானை
மாவினைத் தீ மேலாக்கு வந்திதனால் அம்மானை''.

**XIII. பின்வரும் பகுதியைப் படித்து கொடுத்துள்ள வினாக்களுக்கு விடை தருக :**

**(2 × 2 = 4) 1 × 4 = 4**

உயிர்வாழ்க்கைக்கு அடிப்படையாக இருப்பது இயற்கை. நம் உணவு, உடை, உறையுள், உயிர் எல்லாம் இயற்கை தந்த கொடையே. இயற்கை இல்லாமல் வாழ்க்கை இல்லை. இயற்கை வளங்களைப் பயன்படுத்தி நாம் வாழ்கிறோம். இயற்கைக்கு என்று ஓர் ஒழுங்குள்ளது. இந்து ஒழுங்கு

பின்பற்றப்படும்போது இயற்கை வளங்கள் அவ்வப்பொழுது புதுப்பிக்கப்படும். தொடர்ந்து பயன்தரும். ஒழுங்கைப் பின்பற்றாமல் இயற்கை வளங்களை நுகரும் முயற்சியில் தாறுமாறாக அவற்றை நாம் அழித்துச் சிதைத்தால் நாளடைவில் அவை முற்றிலும் அழிந்து போகும். எனவே மக்கள் இனமாகிய நாம் நம்மை அழியாமல் காப்பாற்ற வேண்டுமென்றால் இயற்கை வளங்கட்கு அழிவு நேராமல் காப்பாற்றியே தீர வேண்டும்.

வினாக்கள் :

43. a) இயற்கை தந்த கொடை எது ?

b) இயற்கை எதனால் அழிந்து போகும் ?

**XIV.** **மடல் எழுதுக :** **1 × 5 = 5**

44. உன் நண்பனுக்கு / தோழிக்கு, ஊரடங்கு காலத்தை பயனுள்ள வழியில் கழித்ததைக் குறித்து மடல் எழுதுக.

*அல்லது*

உனது பகுதியில் தேங்கிக் கிடக்கும் குப்பைகளை அகற்றக் கோரி நகர மன்ற ஆணையருக்கு மடல் எழுதுக.

**XV. கொடுக்கப்பட்டுள்ள தலைப்புகளுக்கு ஏற்றவாறு இருபது வரிகளுக்கு குறையாமல் கட்டுரை எழுதுக: 1 × 5 = 5**

45. ''வீட்டு நலமே நாட்டு நலம்''

*அல்லது*

இன்றைய சூழலில் ''இணையப் பயன்பாடு''